நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**CC. No.414 /2025**

**P.W.2 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | கார்த்தி |
| தந்தை / கணவர் பெயர் | : | குபேந்திரன் |
| கிராமம் | : | மாரிவளவு |
| வட்டம் | : | ஓமலூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW2 |
| வயது | : | 22 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், மார்ச் மாதம், 18–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**(அரசு தரப்பு வழக்கறிஞர் பணிமாறுதலாகி சென்றுவிட்டதால் இந்நீதிமன்றம் தாமாக சாட்சியை விசாரணை செய்கிறது.)**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 03.53 PM

1. நான் தற்போது மாரிவளவில் குடியிருந்து வெல்டிங் வேலை செய்து வருகிறேன்.

அ.சா.1 சூர்யா எனது உடன்பிறந்த அண்ணன் ஆவார். ஆஜர் எதிரி எனக்கு மாமா முறையாவார்.

2. சம்பவதன்று வெல்டிங் வேலைக்கு சென்றுவிட்டு டீக்குடிப்பதற்காக நங்கவள்ளி செல்லவேண்டி எங்கள் ஊரைச் சேர்ந்த பக்கத்து வீட்டுக்காரர் அண்ணன் காரில் நானும், பிரகாஷ்ம் சென்றோம். எனக்கு வெல்டிங் பிசிர் கண்ணில் அடித்திருந்ததால் யார் வண்டியை ஓட்டினார்கள் என்று எனக்கு தெரியவில்லை.

3. நான் அப்போது தூங்கிக்கொண்டு இருந்தேன். எனக்கு சரியாக நினைவில்லை. மோதிய சத்தம் கேட்டது. நான் மயங்கிவிட்டேன். வேறு ஒன்றும் எனக்கு தெரியாது. விபத்து எவ்வாறு நடந்தது என்றும் எனக்கு தெரியாது. எனக்கு மூக்குக்கு அருகில் அடிப்பட்டிருந்தது. என்னை எனது அண்ணன் சூர்யா நங்கவள்ளி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றார். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:- 04.00 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/-நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**